# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க

# வரி ஒதுக்குச் சான்றிதழ் (திருத்தச்) சட்டம்

---

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, மாச்சு மாதம் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35 தபாற் செலவு : சதம் 50

## 1981 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வரி ஓதுக்குச் சான்றிதழ் (திருத்தச்) சட்டம்

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 45/80

### 1957 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க வரி ஓதுக்குச் சான்றிதழ் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால், பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வரி ஓதுக்குச் சான்றிதழ் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

1957 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டின் 22 ஆம் இலக்க வரி ஓதுக்குச் சான்றிதழ் சட்டமானது, அச்சட்டத்தின் 5 ஆம் பிரிவை நீக்குவதன்மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" வருமான வரி, ஆட்கள் வரி, இலாப வரி, செல்வ வரி, கொடை வரி, அல்லது மரணச் சொத்துவரி செலுத்துவதில் சான்றிதழை ஒப்படைத்தல்.

5. சான்றிதழ் வைத்திருப்பவரிடமிருந்து (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் வரி எனக் குறிப்பிடுசெய்யப்படும்) வருமானவரியாக, ஆட்கள்வரியாக, இலாபவரியாக, செல்வவரியாக, கொடைவரியாக, அல்லது மரணச் சொத்துவரியாகப் போமதியான ஏதேனும் பணத்தொகைக்காக, 6 ஆம் பிரிவின்கீழான சான்றிதழின் ஒப்படைப்புப் பெறுமதியுடனான சான்றிதழை உள்நாட்டு அரசிறை ஆணையாளர் தலைமையதிபதியிடம் கொடுப்பனவு என்ற வகையில் அல்லது பகுதியளவினதான கொடுப்பனவு என்ற வகையில் ஒப்படைப்பதற்குச் சான்றிதழ் வைத்திருப்பவர் ஒருவர் உரித்துடையவராதல் வேண்டும்.".

2—ජ 54246— 6,375 (81/01)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்ட என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக் கொள்ளப்படும்.